கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்,
கோவை-10
தொலைபேசி எண்.0422-2208004, 2208014

ந.க.எண்.18777/நிர்வாகம்-1/டெண்டர்/2021-24

நாள்: 18.04.2022

**இருஉறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்குட்பட்ட பிரதான பால்பண்ணை வளாகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பால்பாக்கெட்டுகளை பால்பெட்டிகளில் அடுக்கும் பணி, பால் பாக்கெட்டுகளை குளிர்விப்பு அறையில் அடுக்குதல், பால் விநியோக வழித்தட வாகனங்களுக்கு பால் டிரேக்களை கொண்டு சென்று ஏற்றுதல், கசிவு பால் பாக்கெட்டுகளை பிரித்து அப்புறப்படுத்தி கணக்கு பார்த்தல், பால் பாக்கெட்டுகளை அடுக்கி வைக்கும் குளிர்வு அறை பகுதி மற்றும் ஏற்றுதல் பகுதி தரைகளை சுத்தம் செய்யும் பணி மற்றும் அதன் தொடர்பான பணிகளுக்கு பணி மேற்கொள்ள பணிஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு ஒப்பந்தப்பணி மேற்கொள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்/நிறுவனங்களிடமிருந்து இரு உறை (தொழில்நுட்பப்புள்ளி மற்றும் வணிக விலைப்புள்ளி) முறையில் மூடி முத்திரையிடப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுமேலாளர் அவர்களால் 20.05.2022 பிற்பகல் 02.00 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன.

தொழில்நுட்பப் புள்ளியில் தகுதிவாய்ந்த ஆவணங்கள் அனைத்தும் கண்டிப்பாக இணைக்கப்பட்டு, அதனுடன் “The General Manager, C.D.C.M.P.Union Ltd., Coimbatore” என்ற பெயரில் ஒப்பந்த அறிவிப்பு வெளிவந்த நாளுக்கு பிறகு எடுக்கப்பட்ட வரைவோலையை இணைத்து உறையை சீல்வைத்து முத்திரையிட்டு உறையின் மேல் பால்பாக்கெட்டுகள் அடுக்கும் மறுஒப்பந்தப்பணிக்கான தொழில்நுட்பபுள்ளி என குறிப்பட வேண்டும்.

வணிகவிலைப்புள்ளியில் 1000 பாக்கெட்டுகளுக்கு எவ்வளவு தொகை என்பதை குறிப்பிட்டு உறையை மூடி மெழுகினால் சீல் வைத்து முத்திரையிட்ட அந்த உறையின் மேல் பால்பாக்கெட்டுகள் அடுக்கும் மறுஒப்பந்தப்பணிக்கான வணிகவிலைப்புள்ளி என குறிப்பிட வேண்டும்.

மேற்கூறிய தொழில்நுட்ப மற்றும் வணிகவிலைப்புள்ளிகளையும் ஒரு பெரிய உறையில் இட்டு மூடி மெழுகினால் சீல் வைத்து முத்திரையிட்டு உறையின் மேல் இடதுபக்கம் பால் பாக்கெட்டுகள் அடுக்கும் மறுஒப்பந்தப்பணிக்கான டெண்டர் விலைப்புள்ளி என குறிப்பிட “The General Manager, Coimbatore District Milk Producers’ Union Limited, Pachapalayam Post, Coimbatore – 641010 என்ற முகவரியில் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

பால்பாக்கெட்டுகள் அடுக்கும் ஒப்பந்தப்பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளிகள் வழங்குவது குறித்த முன்கலந்தாய்வு மற்றும் விளக்கக்கூட்டம் 06.05.2022 தேதி காலை 11.00 மணிக்கு இவ்வொன்றிய வளாகத்தில் நடைபெறும்.

| ஒப்பந்தப்பணியின் பெயர் | பிணைவைப்புத் தொகை (EMD) | காப்புத் தொகை (SD) |
|---|---|---|
| ஒன்றியத்திற்குட்பட்ட பிரதான பால்பண்ணை வளாகத்தில் நிரப்பப்பட்ட பால்பாக்கெட்டுகளை பால்பெட்டிகளில் அடுக்கும் பணி, பால் பாக்கெட்டுகளை குளிர்விப்பு அறையில் அடுக்குதல், பால் விநியோக வழித்தட வாகனங்களுக்கு பால் டிரேக்களை கொண்டு சென்று ஏற்றுதல், கசிவு பால் பாக்கெட்டுகளை பிரித்து அப்புறப்படுத்தி கணக்கு பார்த்தல், பால் பாக்கெட்டுகளை அடுக்கி வைக்கும் குளிர்வு அறை பகுதி மற்றும் ஏற்றுதல் பகுதி தரைகளை சுத்தம் செய்யும் பணி மற்றும் அதன் தொடர்பான பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளுதல் | ரூ.4,80,000/- | ரூ.24,00,000/- |

| | |
|---|---|
| மறுஒப்பந்த படிவம் கிடைக்குமிடம் | கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட், பச்சாபாளையம், காளம்பாளையம் அஞ்சல், கோ கோயம்புத்தூர் -641010 |
| மறுஒப்பந்தப்படிவம் விற்பனை நாள் மற்றும் நேரம் | 20.04.2022 முதல் 19.05.2022<br>வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 01.00 மணி வரை. |
| மறுஒப்பந்தப்படிவத்தின் விலை | நேரடியாக பெற ரூ.1000/- (வரிகள் உட்பட)<br>தபால் மூலம் பெற ரூ.1200/- (வரிகள் உட்பட) |
| முன்கலந்தாய்வு கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் முகவரி | 06.05.2022 அன்று காலை 11.00 மணியளவில் மேற்படி முகவரியில் வைத்து நடைபெறும் |
| பூர்த்தி செய்யப்பட்ட மறுஒப்பந்தப்புள்ளிகள் வந்து சேர கடைசி நாள் மற்றும் நேரம் | 20.05.2022 பிற்பகல் 02.00 வரை |
| பெறப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நாள் மற்றும் நேரம் | 20.05.2022 பிற்பகல் 03.00 மணி |

**<u>நிபந்தனைகள்</u>**

மேற்குறிப்பிட்டுள்ள பால்பாக்கெட்டுகள் அடுக்கும் ஒப்பந்தப்பணிக்குரிய பிணைவைப்புத் தொகையான ரூ.4,80,000/-ஐ "The General Manager, Coimbatore District Cooperative Milk Producers' Union Limited, Coimbatore" என்ற பெயரில் கேட்பு வரைவோலை மூலம் செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம், பணி பற்றிய விபரங்கள், ஒப்பந்த விதிமுறைகள் பற்றிய விளக்கங்களை கீழ்க்கண்ட இணையதளம் மூலமாகவும் பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்கலாம். (website address:www.tenders.tn.gov.in, www.aavinmilk.com) டெண்டர் பற்றிய விபரங்கள்/விதிமுறைகள் இணையதளம் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

மறுஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி நாள் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் அரசு விடுமுறையாக அறிவிக்கப்படும் நிலையில் இவை அடுத்த பணி நாளன்று மேற்கொள்ளப்படும். தபாலில் அனுப்பிவைக்கப்படும் டெண்டர் படிவம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டால் அதற்கு நிர்வாகம் பொறுப்பாகாது.

மறுஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் காட்டாமல் முழுவதையுமோ அல்லது பகுதியையோ ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ இவ்வொன்றியத்தின் பொது மேலாளருக்கு முழு உரிமையுண்டு.

பொதுமேலாளர்
கோ.மா.கூ.பா.உ.ஒன்றியம்